# கோவையில் சர்வதேச ஆயுர்வேத மையம்




கோவை, ஆரிய வைத்திய பார்மசியில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொள்ளும் பார்மசியின் நிர்வாக இயக்குநர் பி.ஆர்.கிருஷ்ணகுமார் வாரியர், சாமா தெரபி தலைவர் டாக்டர் சைமன் ஹன்சிகர். உடன் (இடமிருந்து) ஆயுஷ் ஆயுர்வேத ஆலோசகர் ஸ்வாஸ்பவன் சிங், நிர்வாக இயக்குநர் ஆனி கைசர்.

## சுவிட்சர்லாந்து நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோவை, ஏப். 22: ஆரிய வைத்திய பார்மசியும் சுவிட்சர்லாந்து நிறுவனமும் இணைந்து சர்வதேச ஆயுர்வேத மையம் தொடங்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

இதுகுறித்து ஆரிய வைத்திய பார்மசியின் நிர்வாக இயக்குநர் பி.ஆர்.கிருஷ்ணகுமார் வாரியர், சாமா தெரபி தலைவர் டாக்டர் சைமன் ஹன்சிகர் ஆகியோர் கோவையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியது:

இந்தியாவின் பழமை வாய்ந்த மருத்துவச் சிகிச்சை முறையில் ஆயுர்வேதமும் ஒன்றாகும். தற்போது ஆயுர்வேத மருத்துவ முறையை பலர் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். சுவிட்சர்லாந்து நாட்டில் அலோபதி மருத்துவச் சிகிச்சையை விட இயற்கை முறையிலான சிகிச்சை முறையையே அதிகம் நாடுகின்றனர்.

நோய் குணமாக அதிக காலம் தேவைப்படும் என்பதால் பலர் ஆயுர்வேத சிகிச்சை முறையைப் பின்பற்றத் தயங்கி வந்தனர். இதன் காரணமாக ஆயுர்வேத சிகிச்சைத் துறை வளர்ச்சி அடையாமல் இருந்து வந்தது. ஆயுர்வேத சிகிச்சை மூலமாக தற்போது பல நோய்கள் குறித்தும் ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து ஆரிய வைத்திய பார்மசியும் சுவிட்சர்லாந்து நிறுவனமான சாமா தெரபியும் இணைந்து, இந்தோ-சுவிஸ் ஆயுர்வேத பவுண்டேஷனைத் தொடங்கியுள்ளன. இதன்மூலம் இரு நாடுகளிலும் உலக சுகாதார நிறுவனத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி சர்வதேச ஆயுர்வேத மையம் தொடங்கப்பட உள்ளது.

ஆயுர்வேத சிகிச்சை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளவும், ஆயுர்வேதக் கல்வி அளிப்பதன் மூலம் ஆயுர்வேத சிகிச்சை முறை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இம்மையம் உதவும். இரு நாடுகளிலும் ஆயுர்வேத சிகிச்சை முறையை பொது சிகிச்சை முறையின் கீழ் கொண்டுவர அரசுகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படும் என்றனர்.

சர்வதேச ஆயுர்வேத மையம் உருவாக்குவது தொடர்பாக, கோவை அருகே மாங்கரையில் உள்ள 'பதஞ்சலி புரியில் ஞாயிற்றுக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.